JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-3 - Witness
for Prosecution

CC No. 375/2025 Crime No. 536/2024 Station Bhavani

| | | |
|---|---|---|
| Name | Pw.3 திருமதி பகவதி அம்மாள் | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 18.05.2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது ஈரோடு மாவட்ட குற்றப்பதிவேடுகள் ஆவண காப்பகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது, கடந்த 17.09.2024 –ம் தேதியன்று நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரபாபு என்பவர் நிலைய குற்ற எண்.436/2024 சட்டப்பிரிவுகள் 4(1)(a) OF TNP ACT கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், கைது செய்த எதிரிக்கு கிரேக பரிசோதனை செய்தும், புலன் விசாரணைக்காக என்னுடன் ஒப்புவித்த வழக்குக் கோப்பை பெற்ற நான் எதிரியை தக்க நிலையை பிணையில் விடுவித்தேன்.

பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்கலான 180 ML அளவுள்ள MONITOR பாட்டில்கள் – 7 மற்றும் OLD CIP BRANDY பாட்டில்கள் – 3 ஆகியவற்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் முதல் நிலை காவலர் குமரேசன், பெண் காவலர் திருமதி.நந்தினி மற்றும் சிறப்பு உதவியாளர் சந்திரபாபு ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து அன்றைய தினமே 17.09.2024 –ம் தேதியன்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1)(a) OF TNP ACT கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.18 06:14:27 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் ரோந்துக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்பது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால், சரிதான். சாட்சிகள் யாரும் முன் வரவில்லை. சாட்சிகள் முன் வரவில்லை என்கிற நபர்களின் பெயர் மற்றும் விபரம் எதுவும் வாங்கி வைத்துக் கொள்ளவில்லை என்றால், சரிதான். எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால், சரிதான். எதிரி மது பாட்டில்கள் வைத்திருந்த பையை கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

மேலும், நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரி யாருக்கும் மதுபானம் விற்பனை செய்யவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் இந்த குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது உயர் அதிகாரிகள் வேண்டுகோளுக்கிணங்க போடப்பட்ட புள்ளிவிவரக் கணக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.18 06:14:34 +0530

Sd/– (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani